Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், ஜனவரி 22, 2025 | இதழ் 284

# அமிர்த உத்யான் பிப்ரவரி 2 முதல் பொதுமக்களுக்காக திறக்கப்படுகிறது



சென்னை, 22 ஜனவரி 2025: குடியரசுத் தலைவர் மாளிகையின் அமிர்த உத்யான் என்னும் பூந்தோட்டம் 2025 பிப்ரவரி 2 முதல் மார்ச் 30 வரை பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படும். பராமரிப்பு நாட்களான திங்கட்கிழமை தவிர, வாரத்தில் ஆறு நாட்களும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பொதுமக்கள் தோட்டத்துக்குச் செல்லலாம். பிப்ரவரி 5 (தில்லி சட்டமன்றத்திற்கான வாக்குப்பதிவு காரணமாக), பிப்ரவரி 20 மற்றும் 21 (ராஷ்டிரபதி பவனில் பார்வையாளர்கள் மாநாடு காரணமாக), மார்ச் 14 (ஹோலி பண்டிகையை முன்னிட்டு) ஆகிய நாட்களில் தோட்டம் மூடப்படும்.

அனைத்து பார்வையாளர்களுக்கும் நுழைவு மற்றும் வெளியேறும் வழி குடியரசுத் தலைவர் தோட்டத்தின் வாயில் எண் 35- ஆக இருக்கும், இது வடக்கு அவென்யூ, குடியரசுத் தலைவர் மாளிகை ஆகியவை சந்திக்கும் இடத்திற்கு வெகு அருகில் உள்ளது. பார்வையாளர்களின் வசதிக்காக, மத்திய செயலக மெட்ரோ நிலையத்திலிருந்து வாயில் எண் 35 வரை ஒவ்வொரு 30 நிமிடத்திற்கும் ஒருமுறை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை பேருந்து சேவை கிடைக்கும்.

அமிர்த தோட்டம் பின்வரும் நாட்களில் சிறப்பு பிரிவுகளுக்கு திறக்கப்படும்:

மார்ச் 26 - மாற்றுத்திறனாளிகளுக்கு, மார்ச் 27 - பாதுகாப்பு, துணை ராணுவம் மற்றும் காவல்துறை பணியாளர்களுக்கு, மார்ச் 28 - பெண்கள் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, மார்ச் 29 - மூத்த குடிமக்களுக்கு

தோட்டத்துக்கு முன்பதிவு மற்றும் நுழைவு இலவசம். https://visit.rashtrapatibhavan.gov.in என்ற முகவரியில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

2025 மார்ச் 6 முதல் 9 வரை அமிர்த தோட்டத்தின் ஒரு பகுதியாக பன்முகத்தன்மையின் அமிர்தப் பெருவிழாவை குடியரசுத் தலைவர் மாளிகை நடத்துகிறது. இந்த ஆண்டு பெருவிழா தென்னிந்தியாவின் வளமான, தனித்துவமான கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.12 கோடியில் லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம்; ரூ.5 லட்சம் செலவில் திருவள்ளுவர் சிலை: முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்






சென்னை, 22 ஜனவரி 2025: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரத்தின் சொந்த நிதியில் 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் செட்டிநாடு கட்டடக் கலையை பிரதிபலிக்கும் வகையில் 31 ஆயிரம் சதுர அடி பரப்பளவில், கீழ் தளம், தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. கீழ் தளத்தில் கம்பர் நூலக அறை, தொல்காப்பியர் அரங்கமும், முதல் தளத்தில் திருவள்ளுவர், இளங்கோவடிகள் நூலக அறைகளும் இணைய தள வசதியுடன் கூடிய மின் நூலகம், சிறு கூட்டரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன.

நூலகத்தில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களை வைப்பதற்கான இடம் உள்ளது. மேலும், நூலகத்தில் மின்தூக்கி வசதியும், குளிர்சாதன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இச்சிறப்புமிக்க நூலகத்தை முதலமைச்சர் இன்றையதினம் திறந்து வைத்து, மாணவர்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார்.

அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள நிர்வாக தொகுதியின் முகப்பில், அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் கலையரங்கக் கருத்தரங்கக் கூடத்திற்கு "வீறுகவியரசர் முடியரசனார் அரங்கம்" என்று பெயர் சூட்டப்பட்டது. மேலும், கலைஞர் நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு நூலை முதலமைச்சர் வெளியிட, அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் க.ரவி பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, முனைவர் கவிஞர் அண்ணாதாசன் எழுதிய "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பிள்ளைத்தமிழ்" என்னும் நூலை முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப. சிதம்பரம் வெளியிட, அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் க.ரவி பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்,

நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். மாங்குடி, தமிழரசி, டாக்டர் வி. முத்துராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, மாநில திட்டக் குழு துணைத்தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், சிவகங்கை கலெக்டர் ஆஷா அஜித், அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் க.ரவி, பதிவாளர் அ. செந்தில்ராஜன் மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பழங்குடி சமூகங்களிடையே முழுமையான சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய பழங்குடியினர் சுகாதார மாநாடு 2025

சென்னை, 22 ஜனவரி 2025: பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகமானது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் இணைந்து, தேசிய பழங்குடியினர் சுகாதார மாநாடு 2025-ஐ புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் ஜனவரி 20 அன்று ஏற்பாடு செய்திருந்தது. இந்த மைல்கல் நிகழ்வு இந்தியாவின் பழங்குடி சமூகங்கள் எதிர்கொள்ளும் முக்கியமான சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டதாக இந்த மாநாடு அமைந்திருந்தது. இது தார்த்தி ஆபா பழங்குடி கிராம வளர்ச்சி இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முயற்சியாகும்.

புவியியல்ரீதியில் தனிமைப்பட்டிருத்தல், சமூக-பொருளாதார பாதிப்புகள் மற்றும் ஆழமாக வேரூன்றிய கலாச்சார மரபுகள் காரணமாக இந்தியாவின் பழங்குடி சமூகங்கள் பெரும்பாலும் பிரத்யேகமான சுகாதார சவால்களை எதிர்கொள்கின்றன. இந்தக் காரணிகள் சுகாதார அணுகல் மற்றும் விளைவுகளில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகின்றன. இதற்கு சிறப்பு கவனம் மற்றும் தீர்வுகள் தேவைப்படுகின்றன.

இந்த சவால்களை எதிர்கொளளும் வகையில், மத்திய அரசு பல்வேறு மாற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2047-க்குள் அரிவாள் செல் ரத்த சோகை நோயை ஒழிப்பதை இலக்காகக் கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட தேசிய அரிவாள் செல் நோய் ஒழிப்பு இயக்கமும் இவற்றில் ஒன்றாகும். இந்த இயக்கத்தை நிறைவு செய்யும் வகையில், பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகமானது பழங்குடியினர் பகுதிகளில் முழுமையான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ் பல முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், எய்ம்ஸ் மற்றும் இதர பங்குதாரர்களுடன் இணைந்து பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:

பகவான் பிர்சா முண்டா பழங்குடியினர் சுகாதாரம் மற்றும் ரத்தவியல் இருக்கை: தில்லி எய்ம்ஸில் நிறுவப்பட்டுள்ள இந்த இருக்கை, பழங்குடியினர் சுகாதாரம் குறித்த ஆராய்ச்சி மற்றும் தரவு சேகரிப்புக்கான பல்துறை தளமாக செயல்படுகிறது.

திறன் மையங்கள்:

பழங்குடி மக்களிடையே நிலவும் மரபணு நிலைமையான அரிவாள் செல் ரத்த சோகையை நவீன முறையிலும் மற்றும் பிறப்புக்கு முந்தைய நிலையிலும் கண்டறிவதற்காக 14 மாநிலங்களில் 15 திறன் மையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

கூட்டு அணுகுமுறை: சுகாதார சேவையைத் திறம்பட வழங்குவதை உறுதி செய்வதற்காக மத்திய சுகாதாரம் மற்றும் விவசாய அமைச்சகம், மத்திய ஆயுஷ் அமைச்சகம், மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், எய்ம்ஸ், சிஓசி, ஐசிஎம்ஆர், ஐநா முகமைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநில பழங்குடியினர் நலத் துறைகள் இணைந்து நெருக்கமாக பணியாற்றி வருகின்றன.

தேசிய பழங்குடியினர் சுகாதார மாநாடு 2025 - இல் சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, ஆயுஷ், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் ஆகிய அமைச்சகங்களின் அதிகாரிகள், மூத்த மாநில அரசு அதிகாரிகள், என்எச்எம் பிரதிநிதிகள், எய்ம்ஸ் இயக்குநர்கள், பழங்குடி சுகாதார நிபுணர்கள், முதன்மை நிறுவனங்கள், ஐ.நா ஏஜென்சிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பலவற்றின் அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்கள் கலந்து கொண்டனர். பழங்குடியினர் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதற்கான கொள்கை தலையீடு, செயல் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பாடத்திட்டத்தை திருத்தும் முயற்சிகளுக்கான முன்னுரிமை பகுதிகளை அடையாளம் காண்பதில் இந்த மாநாடு கவனம் செலுத்தியுள்ளது.

# குடியரசு தின கொண்டாட்டங்கள் 2025: தேசிய பள்ளி இசைக்குழு இறுதிப்போட்டி புதுதில்லியில் உள்ள மேஜர் தயான் சந்த் தேசிய ஸ்டேடியத்தில் நடைபெற உள்ளது



சென்னை, 22 ஜனவரி 2025:

குடியரசு தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய பள்ளி இசைக்குழு போட்டி 2024-25 -இன் இறுதிப்போட்டி 2025 ஜனவரி 24 & 25 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் உள்ள மேஜர் தயான் சந்த் தேசிய ஸ்டேடியத்தில் நடைபெறும். ஜனவரி 25-ம் தேதி பரிசளிப்பு விழாவில் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் கலந்து கொள்வார்.

ஒவ்வொரு மண்டலத்தில் இருந்து (கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலம்) நான்கு அணிகள் வீதம் மொத்தம் 16 இசைக்குழு அணிகள் பங்கேற்கின்றன. நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் உள்ள குழந்தைகளிடையே தேசபக்தி மற்றும் ஒற்றுமை உணர்வை புத்துயிர் பெறச் செய்யவும், முழுமையான கல்விக்கான பாதையில் அவர்கள் பயணிப்பதை ஊக்குவிக்கவும் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு ரொக்கப் பரிசு( முதல் இடம் - ரூ.21,000/-, 2-வது இடம் - ரூ.16,000/-, 3-வது இடம்- ரூ.11,000), ஒரு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் மீதமுள்ள அணிக்கு தலா ரூ.3,000/- ஆறுதல் ரொக்கப் பரிசு வழங்கப்படும். பாதுகாப்பு படைகளின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சகத்தால் நியமிக்கப்படும் நடுவர் குழுவால் மாணவர்களின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்படும்.

# வெரிடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனம், ஒரு ஆரம்பப் பொது வழங்கலுக்காக எஸ்இபிஐ இடம் டிஆர்எச்பி யை தாக்கல் செய்கிறது

சென்னை, 22 ஜனவரி 2025: இந்திய ரிசர்வ் வங்கியில் (ஆர்பிஐ) பதிவுசெய்யப்பட்ட ஒரு சில்லறை வணிகத்தை மையமாகக்கொண்டு டெபாசிட் ஏற்றுக்கொள்ளாத என்பிஎஃப்சி மற்றும் ரிசர்வ் வங்கியின் அளவு அடிப்படையிலான விதிமுறைகளின் கீழ், 'என்பிஎப்சி-மிடில் லேயர்' என வகைப்படுத்தப்பட்டுள்ள வெரிடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட், ஒரு ஆரம்பப் பொது வழங்கலுக்காக (ஐபிஓ) ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் (டிஆர்எச்பி) ஐ எஸ்இபிஐ உடன் தாக்கல் செய்துள்ளது.

ஒரு பன்முகப்படுத்தப்பட்ட, சில்லறை வணிகத்தை மையமாகக் கொண்ட என்பிஎஃப்சி ஆக இது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ("எம்எஸ்எம்இ கள்") மற்றும் சுயதொழில் செய்யும் தனி நபர்களுக்கு சிறு வணிகக் கடன்களை முதன்மையாக வழங்குகிறது, மேலும் பல ஆண்டுகளாக, வீட்டுக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட வணிக வாகனக் கடன்களை சேர்ப்பதற்கு தனது வணிகத்தை விரிவுபடுத்தியுள்ளது.

ரூ. 2,800 கோடி வரை திரட்டுகின்ற இந்தப் பொது வழங்கல், ஒவ்வொரு ஈக்விட்டி பங்கிற்கும் ரூ10 முகமதிப்பு கொண்ட, மொத்தமாக ரூ. 600 கோடி வரையிலான ("புதிய வெளியீடு") ஈக்விட்டி பங்குகளின் ஒரு புதிய வழங்கல் மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் செய்யப்பட்ட மொத்தமாக ரூ. 2,200 கோடி வரையிலான ஈக்விட்டி பங்குகளின் விற்பனைக்கான வழங்கல் ("விற்பனைக்கான வழங்கல்") ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தப் பொது வழங்கல் ஒரு பகுதியான பணியாளர்கள் ("பணியாளர் ஒதுக்கீட்டுப் பகுதி") சந்தா பெறுவதற்கான ஈக்விட்டி பங்குகளின் ஒரு முன்பதிவை உள்ளடக்கியது.

நிறுவனத்தின் எதிர்கால வணிகத் தேவைகளைப் பூர்த்தி செய்து கடன் வழங்குவதற்காக, அவர்களின் மூலதன தளத்தை பெருக்குவதை நோக்கி நிகர வருவாயைப் பயன்படுத்த இந்த நிறுவனம் முன்மொழிகிறது.

ரூ. 2,200 கோடி வரையிலான இந்த விற்பனைக்கான வழங்கல், நார்வெஸ்ட் வென்ச்சர் பார்ட்னர்ஸ் எக்ஸ் - மொரிஷியஸ் மூலம் மொத்தமாக ரூ. 550 கோடி வரை கேதாரா கேபிட்டல் ஃபண்ட் ஐஐ எல்எல்பி மூலம் ரூ. 550 கோடி வரை பிரிட்டிஷ் இன்டர்நேஷனல் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சி மூலம் ரூ. 500 கோடி வரையிலான ஈக்விட்டி பங்குகள் லோக் கேபிடல் வளர்ச்சி நிதியத்தால் ரூ. 425 கோடி வரை; குரோத் கேட்டலிஸ்ட் பார்ட்னர்ஸ் எல்எல்சி மூலம் ரூ. 75 கோடி வரையிலான ஈக்விட்டி பங்குகள் (ஒட்டுமொத்தமாக "முதலீட்டாளர் விற்பனை செய்யும் பங்குதாரர்கள்" என குறிப்பிடப்படுகிறது) மற்றும் வித்யா அருள்மணி மூலம் மொத்தமாக ரூ. 36 கோடி வரையிலான ஈக்விட்டி பங்குகள் பி. சுரேந்திர பாய் மூலம் ரூ. 21 கோடி வரை சவிதா எஸ். பை மூலம் ரூ. 21 கோடி வரை; ஷீலா பை கோலே மூலம் ரூ. 14 கோடி வரை; மற்றும் மோனிஷா ஷரத் காந்தியின் மூலம் ரூ. 8 கோடி வரையிலான ஈக்விட்டி பங்குகள் (ஒட்டுமொத்தமாக "தனிநபர் விற்பனை செய்யும் பங்குதாரர்" மற்றும் முதலீட்டாளர் விற்பனை செய்யும் பங்குதாரர்களுடன் "விற்பனை செய்யும் பங்குதாரர்கள்" ஆக) (புதிய வெளியீடு உடன் "விற்பனைக்கான வழங்கல்" "வழங்கல்") ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

ஆர்ஓசி உடன் ரெட் ஹெர்ரிங் ப்ரோஸ்பெக்டஸை தாக்கல் செய்வதற்கு முன், நிறுவனம், பிஆர்எல்எம் களுடன் கலந்தாலோசித்து, பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டபடி மொத்தமாக ரூ. 120 கோடி வரையிலான குறிப்பிட்ட சில பத்திரங்களின் முன்-ஐபிஓ ப்ளேஸ்மென்ட்டை பரிசீலிக்கலாம் ("ப்ரீ-ஐபிஓ பிளேஸ்மெண்ட்"). இந்த முன்-ஐபிஓ ஒதுக்கீடு செய்தல், மேற்கொள்ளப்பட்டால், பிஆர்எல்எம்களுடன் கலந்தாலோசித்து நிறுவனம் முடிவு செய்யும் ஒரு விலையில் இருக்கும். இந்த ப்ரீ-ஐபிஓ ப்ளேஸ்மென்ட் முடிவடைந்தால், திருத்தப்பட்ட பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957ன் விதி 19(2)(பி) க்கு இணங்குவதற்கு உட்பட்டு, முன்-ஐபிஓ ஒதுக்கீடு செய்தலுக்கு ஏற்ப திரட்டப்படும் தொகை புதிய வெளியீட்டில் இருந்து குறைக்கப்படும்.

2015 இல் நிறுவப்பட்ட வெரிடாஸ் ஃபைனான்ஸ் ஆனது இந்திய ரிசர்வ் வங்கியில் ("ஆர்பிஐ") பதிவுசெய்யப்பட்ட, மற்றும் ரிசர்வ் வங்கியின் அளவு அடிப்படையிலான விதிமுறைகளின் கீழ் 'என்பிஎஃப்சி-மிடில் லேயர்' என வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு டெபாசிட் எடுக்காத வங்கி அல்லாத நிதி நிறுவனமாகும் ("என்பிஎஃப்சி").

ஒரு பன்முகப்படுத்தப்பட்ட, சில்லறை வணிகத்தை மையமாகக் கொண்ட ழிஙிதிசி ஆக, இது முதன்மையாக சிறு வணிகக் கடன்களை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ("எம்எஸ்எம்இ கள்") மற்றும் சுயதொழில் செய்யும் தனி நபர்களுக்கு வழங்குகிறது, மேலும் பல ஆண்டுகளாக, வீட்டுக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட வணிக வாகனக் கடன்களைச் சேர்க்கும் வகையில் தனது வணிகத்தை விரிவுபடுத்தியுள்ளது. சிஆர்ஐஎஸ்ஐஎல் எம்ஐ & எ இன் கூற்றுப்படி, 2022 முதல் 2024 வரையிலான நிதியாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒப்பிடப்பட்ட சக நிறுவனங்களுக்கிடையேய கடன்களின் (எயுஎம்) வளர்ச்சியின் அடிப்படையில் ஒரு 61.76% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன் ("சிஎஜிஆர்") இது வேகமாக வளர்ந்து வரும் என்பிஎஃப்சி ஆகும். கடன் பெறுவதற்கான அணுகலை வழங்குவதன் மூலம், சேவை குறைந்த மற்றும் வங்கி சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் கொண்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வதில் இந்த நிறுவனம் கவனம் செலுத்துகிறது.

ஐசிஐசிஐ செக்யூரிட்டீஸ் லிமிடெட், ஹெச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட், ஜெஃப்ரீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், கோடக் மஹிந்திரா கேபிடல் கம்பெனி லிமிடெட் மற்றும் நுவாமா வெல்த் மேனேஜ்மென்ட் லிமிடெட் ஆகியவை இந்த வெளியீட்டின் முன்னணி புக் ரன்னிங் மேலாளர்களாக உள்ளன.

ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்படும் ஈக்விட்டி பங்குகள், பிஎஸ்இ லிமிடெட் ("பிஎஸ்இ") மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (பிஎஸ்இ, உடன் "என்எஸ்இ", "பங்குச் சந்தைகள்") ஆகியவற்றுடன் யூங்குச் சந்தைகளில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளது.

# கைனெடிக் கிரீன் திருச்சியில் புதிய விற்பனை மையத்தை திறந்து தமிழகத்தில் தனது வலைகட்டமைப்பை வலுப்படுத்துகிறது




சென்னை, 22 ஜனவரி 2025: இந்தியாவின் முன்னணி மின்சார இருசக்கர மற்றும் முச்சக்கர வாகன உற்பத்தியாளரான கைனெடிக் கிரீன் எனர்ஜி அண்ட் பவர் லிமிடெட் சொல்யூஷன்ஸ், திருச்சி கண்டோன்மென்ட் பகுதியில் உள்ள 13ஏ, பேர்ட்ஸ் சாலையில் புதிய மின்சார இருசக்கர வாகன விற்பனை மையத்தை திறந்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. தமிழ்நாட்டில் தனது வணிக இருப்பை விரிவுபடுத்தும் நிறுவனத்தின் முயற்சியில் இது ஒரு முக்கிய மைல் கல் ஆகும்.

டி.ஜே. அழகேந்திரன் நிறுவனத்தின் உரிமையாளர் வெங்கடேஷ்துரை அவர்கள் திறப்பு விழா பட்டையை வெட்டி வைத்தார். திறப்பு விழாவில் முக்கிய கருத்து முனைபவர்களும், வாடிக்கையாளர்களும் கலந்து கொண்டனர். பருவநிலை மாற்றம் மற்றும் மாசுபாட்டைக் களையும் மின்சார வாகனங்களின் (இவி) முக்கிய பங்கு குறித்து அவர்கள் விவாதித்தனர். நிலையான எதிர்காலத்திற்கான மின்சார 'ாகனங்களின் முக்கியத்துவத்தையும், அவற்றின் பரவலான பயன்பாட்டின் தேவையையும் எடுத்துரைத்தனர். ளேலும், திறப்பு விழா நாளில் நான்கு இ-லுனா வாகனங்களுக்கான உடனடி முன்பதிவுகளை விற்பனை மையம் பெற்றது.

திருச்சியில் உள்ள கைனெடிக் கிரீன் புதிய விற்பனை மையம் விசாலமான வளாகமாக அமைந்துள்ளது.

இந்திய நுகர்வோரின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட இ-லுனா, இ-சுலு, ஃப்ளெக்ஸ் மற்றும் ஜிங் ஆகிய பல்வேறு மின்சார இருசக்கர வாகனங்களை இவ்விற்பனை மையம்

பெருமையுடன் காட்சிப்படுத்துகிறது. இந்த மாதிரிகள் நிலைத்தன்மையை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து, சிறப்பம்சங்களாக புத்திசாலித்தனமான, கூர்மையான மற்றும் நேர்த்தியான வடிவமைப்புகளை வழங்குகின்றன.

விற்பனை மைய விரிவாக்கம் குறித்து கைனெடிக் கிரீன் இருசக்கர வாகனப் பிரிவு தலைவர் திரு. யூங்கஜ் சர்மா கூறுகையில், "தமிழ்நாடு முழுவதும் எங்களது வணிக விரிவாக்கத்தின் முக்கிய படியாக திருச்சியில் எங்களது புதிய விற்பனை மையத்தை திறந்திருப்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்தியா முழுவதும் மின்சார இயக்க வாகனப் பயன்பாட்டை எளிதில் அணுகக்கூடியதாகவும், பிரதானமான பொதுப்போக்குவரத்தாகவும் மாற்றுவதற்கான எங்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த மைல்கல் பிரதிபலிக்கிறது. எங்களது அர்ப்பணிப்புமிக்க காட்சிக்கூட குழுவினர், வாடிக்கையாளர்களுக்கு

நிபுணத்துவ வழிகாட்டுதலுடன் உதவி புரிவார்கள். இதன்மூலம் வாடிக்கையாளர்கள் தடையற்ற கொள்முதல் அனுபவம், சேவை ஆதரவு ஆகியவற்றைப் பெறுவதோடு, தங்களது கொள்முதல் தொடர்பான தெளிவான முடிவுகளை எடுக்கவும் உதவி செய்யப்படுவார்கள்" என்றனர்.

இதனைத் தொடர்ந்து, திருச்சியில் உள்ள கார்த்திக் ஏஜென்சீஸ் கிரீனின் உரிமையாளர் ரமேஷ் கண்ணன் கூறுகையில், "கைனெடிக் கிரீனுடன் கூட்டிணைவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். னுங்கள் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கும், ஆதரவிற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவைகளையும், வல்லுநர் வழிகாட்டுதல்களையும் வழங்குவதன் மூலம் அவர்கள் சரியான முடிவுகளை எடுக்க உதவுவதும், உலகத்தரம் வாய்ந்த சேவை அனுபவத்தை உறுதி செய்வதுமே எங்களது நோக்கமாகும். மின்சார வாகனச் சந்தையின் விரைவான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, திருச்சியில் சுற்றுச்சூழல் நட்புடனான போக்குவரத்து தீர்வுகளை முன்னெடுப்பதில் இந்த விற்பனை நிலையம் முக்கியப் பங்காற்றும் என்பதில் நான் முழு நம்பிக்கை கொண்டுள்ளேன்" என்றனர்.

# நிஹாரிகா என்டர்டெயின்மென்ட் மற்றும் தி ஷோ பீப்பிள் தயாரிப்பில் ஆர்யா வழங்க சந்தானம் நடிக்கும் 'டிடி நெக்ஸ்ட் லெவல்' முதல் பார்வை சந்தானம் பிறந்த நாளான இன்று வெளியிடப்பட்டது

சென்னை, 22 ஜனவரி 2025: சந்தானம் நடிப்பில் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற 'டிடி ரிட்டர்ன்ஸ்' திரைப்படத்தின் அடுத்த பாகமான 'டிடிநெக்ஸ்ட் லெவல்' முதல் பார்வை சந்தானத்தின் பிறந்த நாளான இன்று வெளியிடப்பட்டது. ரசிகர்கள் அனைவரையும் கவரும் வகையில் முதல் பார்வை உள்ளது.

நிஹாரிகா என்டர்டெயின்மென்ட் மற்றும் தி ஷோ பீப்பிள் நிறுவனங்கள் பிரம்மாண்ட பட்ஜெட்டில் இணைந்து தயாரிக்கும் இப்படத்தை நடிகர் ஆர்யா வழங்க சந்தானம் நாயகனாக நடிக்கிறார். படப்பிடிப்பு




இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. மே மாதம் இப்படம் திரையரங்குகளில் வெளியாகிறது.

'டிடி ரிட்டர்ன்ஸ்' திரைப்படத்தை இயக்கிய எஸ். பிரேம் ஆனந்த், 'டிடி நெக்ஸ்ட் லெவெல்' திரைப்படத்தையும் இயக்குகிறார். முக்கிய வேடங்களில் முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கின்ற□னர்.

திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் பிரேம் ஆனந்த், "'டிடி ரிட்டர்ன்ஸ்' திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்போடு பெரும் வெற்றி பெற்றது. அதன் அடுத்த பாகத்திற்கான ஸ்கிரிப்ட் வேலைகளை ஒரு வருடமாக தொடர்ந்து செய்து முடித்தோம். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சிரித்து, ரசித்து மகிழும் திரைப்படமாக இதுவும் இருக்கும்," என்றார்.

யொடர்ந்து பேசிய அவர், "மிக அதிக பொருட்செலவில் உருவாகி வரும் இத்திரைப்படத்தின் கதை ஒரு சொகுசு கப்பலில் தொடங்கி தீவு ஒன்றில் நடைபெறும் வகையில் அமைந்துள்ளது. இதற்காக பிரம்மாண்ட பட்ஜெட்டில் அரங்கங்களை அமைத்தோம். இப்படத்தை தயாரிப்பதற்காக நிஹாரிகா என்டர்டெயின்மென்ட், நடிகர் ஆர்யா மற்றும் சந்தானம் இணைந்திருப்பது மிக்க மகிழ்ச்சி. 'டிடி ரிட்டர்ன்ஸ்' திரைப்படத்தை விட அதிக குதூகலத்தையும் உற்சாகத்தையும் ரசிகர்களுக்கு இப்படம் வழங்கும்," என்று கூறினார்.

'டிடி நெக்ஸ்ட் லெவல்' படத்தின் ஒளிப்பதிவை தீபக் குமார் பதி கையாள, ஆஃப்ரோ இசையமைக்கிறார். பரத் படத்தொகுப்புக்கும் ஏ ஆர் மோகன் கலை இயக்கத்திற்கும் பொறுப்பேற்றுள்ளனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இந்தியாவில் குறைதைராய்டு சுரப்பு மற்றும் ரத்தசோகை என்ற இரு சவால்களை நிர்வகித்தல்

கோயம்புத்தூர், 22 ஜனவரி 2025: இந்தியாவில், 42 மில்லியன் மக்கள் தைராய்டு நோய்களால் பாதிக்கப்படுகின்றனர் மற்றும் இதில் குறைதைராய்டு சுரப்பு ஆனது 10 வயது வந்தவர்களில் ஒருவரை பாதிக்கின்ற வகையில் மிகவும் பரவலாக காணப்படுகிறது. குறைதைராய்டு சுரப்பின் முதல் அறிகுறியான ரத்தசோகை ஆனது குறைதைராய்டு சுரப்பு உள்ளவர்களில் 41.8% பேரை தாக்குகிறது. இந்த உலக தைராய்டு விழிப்புணர்வு மாதத்தில் இதன் இரட்டை சவால்களை பற்றி மக்களுக்கு நினைவூட்டுவது மிகவும் முக்கியமாகும் மற்றும் இவற்றிற்கு சிகிச்சையளிக்கவில்லையென்றால் குறிப்பிடத்தக்க வகையில் ஒட்டுமொத்த உற்பத்தி திறன் மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை பாதிக்கும்.

வழக்கத்தை விட குறைவான சிவப்பணுக்களின் குறைந்த எண்ணிக்கையால் கண்டறியப்படும் ரத்தசோகை ஆனது பெரும்பாலும் குறைதைராய்டு சுரப்புடன் 5 இணைந்து காணப்படுகிறது. குறைதைராய்டு சுரப்பில் உங்கள் கழுத்திலுள்ள வண்ணத்துபூச்சி வடிவ கணைய உறுப்பானது தேவையான அளவில் தைராய்டு ஹார்மோன்களை சுரப்பதில்லை. இந்த ஹார்மோன்கள் மிகவும் முக்கியமானவை ஏனெனில் இவை உங்கள் உடல் ஆனது ஆற்றலை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை கட்டுப்படுத்துகின்ற உங்கள் உடலின் வளர்சிதை மாற்றத்தை கட்டுப்படுத்துகின்றன. இந்த இரு நோய்களின் அறிகுறிகள் குறிப்பாக குளிர்காலத்தில் ஒன்றையொன்றை மறைத்து மேல் தோன்றலாம் எப்போழுதென்றால் வெளிர் சருமமானது ரத்தசோகையின் அறிகுறிகளை மறைப்பதன் மூலம். இந்த தொடர்பு நிலவினாலும் இது பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது.

குளிர்காலத்தில் வெப்பத்தை உருவாக்கவும் அதை கட்டுப்படுத்தவும் உடலானது அதிகளவில் தைராய்டு ஹார்மோன்களை நாடுகிறது. இது எடை அதிகரிப்பு, அயர்வு, மனசோர்வு, உலர் மற்றும் சொரசொரப்பான சருமம் மற்றும் முடி, ஜலதோஷத்தை எதிர்கொள்வதில் சிரமம் மற்றும் கைகளில் ஊசி குத்தல் உணர்வு மற்றும் வேறு பல அறிகுறிகளை உள்ளிட்ட பொதுவான அறிகுறிகளை மோசமடைய செய்யலாம். ஆண்களை விட பெண்கள் குறைதைராய்டு சுரப்பினால் பாதிக்கப்படும் மூன்று மடங்கு அபாயத்தை கொண்டுள்ளனர் மற்றும் வயதானவர்கள் இதனால் பாதிக்கப்படும் மற்றொரு குழுவாகும். இவை எவ்வாறு ஒன்றுக்கொன்று யொடர்புடையவை? குறை தைராய்டு அளவுகள் சிவப்பணுக்களின் உற்பத்தியை மட்டுப்படுத்துகின்றன மற்றும் இந்த வழிமுறையானது ஹைப்போதைராய்டிசம் அல்லது ஹஷிமோட்டோவின் யைூராய்டிட்டிஸ் ஆகியவற்றின் விளைவுகளால் மேலும் சிக்கலாகிறது. இந்த நோய் நிலைகள் ஆனவை பெரும்பாலும்

ைட்டமின் பி 12 குறைபாட்டிற்கு வழிவகுத்து சிவப்பணு உற்பத்தியையும் பாதிக்கலாம். கூடுதலாக,

குறை தைராய்டு அளவுகள் இரும்புசத்து ஏற்பில் தலையீடு செய்யலாம் மற்றும் பல்வேறு வளர்சிதை

மாற்ற செயல்முறைகளுக்கு பாதகம் ஏற்படுத்தலாம். ஏதேனும் ஒன்றிற்கு சிகிச்சையளிக்கப்படா விட்டால் இச்சிக்கல்கள் முக்கிய பிரச்சினையை பெரிதாக்கி இந்நிலையை நிர்வகிப்பதை கடினமாக்கலாம். இத்தொடர்பை பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பது உரிய நேர மற்றும் துல்லியமான நோய் கண்டறிதலுக்கு மட்டுமன்றி நோயாளிகளுக்கு உகந்த பராமரிப்பு மற்றும் சிகிச்சை பெறுவதற்கும் அவசியமாகிறது.



அபாட் இந்தியாவின் மருத்துவ விவகாரங்கள் தலைவரான டாக்டர் ரோஹிதா ஷெட்டி கூறுகையில்,

"ஹைப்போதைராய்டிசம் மற்றும் ரத்தசோகை என்பன இந்தியாவில் குறிப்பிடத்தக்க சுகாதார அச்சுறுத்தல்கள் என்றாலும் உரிய நேரத்து நோய் கண்டறிதல் மற்றும் தொடர் சிகிச்சை மூலம் அவற்றை திறம்பட நிர்வகிக்கலாம். இந்த இரு நோய் நிலைகளுக்குமிடையேயுள்ள தொடர்பை பற்றி அதிக மக்களுக்கு எடுத்து கூறுவது மற்றும் அறிகுறிகள் கொண்டவர்களை மருத்துவ ஆலோசனை பெற ஊக்கப்படுத்துவது ஆகியன முக்கியம். உதாரணமாக கோடைகாலத்திலும் உங்கள் உறவினர் ஒருவர் குளிராக உணர்வதை நீங்கள் கவனித்தால் அல்லது உங்கள் நண்பர் அடிக்கடி ஓயாத அயர்ச்சி பற்றி புகார் தெரிவித்தால் அவர்களை ஒரு மருத்துவரை பார்த்து சோதனை செய்து கொள்ள கூறுங்கள்" என்று விளக்கினார்.

டாக்டர் பி. வேலாயுதம், ஆலோசக என்டோக்ரைனாலாஜிஸ்ட், ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கோயம்புத்தூர், "இன்று குறைதைராய்டு சுரப்பு மற்றும் ரத்தசோகை ஆகியவற்றின் சுமையானது அதிகரித்து வருகிறது. உதாரணமாக, ரத்தசோகையானது 15 மற்றும் 49 வயது பெண்களில் 2015-16 இல் 53% இலிருந்து 2019-202 இல் 57% ஆக உயர்ந்துள்ளது 7 . இந்த இரு நோய் நிலைகளுக்குமிடையேயுள்ள தொடர்பை பற்றி மக்கள் புரிந்துக்கொள்வது மிக முக்கியம் ஏனெனில் இது நோய்கண்டறிதலுக்கு உதவும் மற்றும் உகந்த ஆலோசனை மற்றும் சிகிச்சையை உறுதிபடுத்தும்" என்று விளக்கினார்."

அதிக-ஆபத்து குழுக்களில் உள்ளவர்கள் பின்வரும் நோய் நிலைகளுக்கு சோதனை செய்துக்கொள்ள

வேண்டும்: பெண்கள் (குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள்), முதியவர்கள், ஆட்டோ-இம்யூன் நோய்கள் உள்ளவர்கள் (செலியாக் அல்லது க்ரானின் நோய் போன்றவை), ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் (பி12 முதல் டி வரையுள்ள பல்வேறு வைட்டமின்கள், இரும்புச்சத்து மற்றும் பலவற்றை உள்ளடக்கியது), நாள்பட்ட நோய் உள்ளவர்கள் (நீரிழிவு, நாள்பட்ட சிறுநீரக நோய் மற்றும் கல்லீரல் நோய் போன்றவை), நாள்பட்ட அமிலத்தன்மை மற்றும் செரிமான கோளாறுகள் உள்ளவர்கள் இரு நோய் நிலைகளையையும் சிறப்பாக நிர்வகிக்க நோய் கண்டறிதல் முக்கியம்.

எது முக்கியம் என்றால் உங்கள் ஆரோக்கியத்தை பற்றி விழிப்பாக இருப்பதே. விரைவிலேயே நோய் கண்டறிதலும் சிகிச்சையும் குறிப்பிடத்தக்க வேறுபாட்டை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்வது நல்லது. இந்த அறிகுறிகளை கொண்டவர்கள் சோதனை செய்துக்கொள்வதன் அடுத்த படிநிலைகளை பற்றி தங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும். இது தைராய்டு செயல்பாட்டு சோதனை அல்லது ஒட்டுமொத்த ரத்த எண்ணிக்கை மற்றும் ரத்தசோகைக்காக ஃபெரிட்டின், வைட்டமின் பி12 மற்றும் ஃபோலேட் அளவுகள் போன்ற மார்க்கர்களின் எண்ணிக்கையை சரிபார்த்தல் ஆகியவற்றை உள்ளடக்கும். உங்கள் ஆரோக்கியத்தை கட்டுப்பாட்டில் எடுங்கள் மற்றும் அன்றாடம் சிறந்த தரத்துடன் வாழ்க்கையை வாழுங்கள்!

# மாநில உதய தினத்தை முன்னிட்டு மேகாலயா மக்களுக்கு பிரதமர் வாழ்த்து

சென்னை, 22 ஜனவரி 2025: மாநில உதய தினத்தை முன்னிட்டு மேகாலயா மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டிருப்பதாவது:

"மேகாலயாவின் மாநில உதய தினத்தை முன்னிட்டு, மாநில மக்களுக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேகாலயா, அதன் இயற்கை அழகு மற்றும் மக்களின் கடின உழைப்பின் பண்புகளுக்காக போற்றப்படுகிறது. வரும் காலங்களில் மாநிலத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்காக பிரார்த்திக்கிறேன்."



# தமிழக முதலமைச்சரின் வழியில் கேரள அரசும் யுஜிசி வரைவறிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை



சென்னை, 22 ஜனவரி 2025: மக்களாட்சியையும் மாநிலங்களின் கல்வி சுயாட்சியையும் சிதைக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசிற்கு எதிராக ஒன்றாக நின்று போராட வேண்டிய நேரமிது. மாநில அரசு இதுவரை உருவாக்கி வளர்த்து வைத்துள்ள பல்கலைக்கழகங்களை எல்லாம் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (யுஜிசி) வாயிலாகக் கைப்பற்றி, நமது கல்வி வளர்ச்சியைத் தடுக்க முயல்கிறது மோடி அரசு.

'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு உருவாக்கிய பல்கலைக்கழகங்கள் மீது மாநில அரசுக்கே எந்த உரிமையையும் கிடையாது' எனக் கூறுவது சர்வாதிகார ஆணவம் அன்றி வேறென்ன? மாநில அரசுகளை மிரட்டிப்பார்க்கும் ஆதிக்க நடவடிக்கை இது.

கல்வி சார்ந்த உரிமைகள் அரசியலமைப்பின் ஒத்திசைவுப் பட்டியலில் (கான்கரன்ட்) உள்ள போது மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல், தன்னிச்சையாக யுஜிசி அறிவிப்பை வெளியிட்டிருப்பது, அதன் அதிகார வரம்பை மீறிய அத்துமீறல் நடவடிக்கை. கல்வி சார்ந்த வழிகாட்டிகளை வழங்கக் கூடிய ஹிநிசி ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறியிருக்கிறது.

ஒன்றிய அரசின் யுஜிசி விதிகளை ஏற்காவிட்டால், மாணவர்கள் கஷ்டப்பட்டுப் படித்து வாங்கும் பட்டங்கள் செல்லாது; யூஜிசி திட்டங்களில் பங்கேற்க முடியாது; பல்கலைக்கழகங்களின் சட்ட அங்கீகாரம் செல்லாது என்றெல்லாம் யூஜிசி அறிவித்திருப்பது நேரடியாய் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி மீது தொடுக்கப்பட்ட போர்.

மோடி அரசின் உதய் மின் திட்டத்தில் கையெழுத்திட வேண்டும் என மிரட்டியபோது முந்தைய அதிமுக அரசு கையெழுத்திட்டது. அதன் விளைவுகளை இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

தேசியக் கல்விக்கொள்கையில் கையெழுத்திடாவிட்டால் நிதி தர மாட்டோம் என விதிகளை வகுக்கிறார்கள்.

இந்த மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் ஒருநாளும் திராவிட மாடல் அரசு அஞ்சாது! பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு இது தெரியும்.

துணை வேந்தர் நியமனத்தில் மாநில அரசின் உரிமையை மறுப்பதோடு கல்வியாளர் அல்லாதவர்களைத் துணை வேந்தர்களாக நியமிக்கலாம் என்றும் தனது அடிப்படை கல்வித் தகுதியிலிருந்து மாறுபட்ட பாடத்தில் முனைவர் பட்டமோ அல்லது என்இடி/எஸ்இடி தகுதி பெற்றவர்களோ பேராசியர்கள் ஆகலாம் என யூஜிசி வரைவறிக்கை தெரிவித்திருப்பது கல்வித் துறையைச் சீரழித்து மாணவர்களின் கல்விக் கனவைப் பாழாக்கிவிடும். இதன் ஆபத்தை உணர்ந்துதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த வரைவறிக்கைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்குக் கடிதமும் எழுதினார்.

ஒன்றிய பாஜக அரசின் இந்த செயல் தமிழ்நாட்டின் கல்வி மீது தொடுத்திருக்கும் தாக்குதல் மட்டுமல்ல, தனித்துவமான இந்திய மாநிலங்கள் அனைத்தின் மீதான தாக்குதல். அதனால்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "பாஜக அல்லாத மாநில முதல்வர்கள் தமிழகத்துடன் இணைந்து இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிராகரித்து சட்டமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். மாநிலங்கள் ஒன்றிணைந்து, நமது கல்வி நிறுவனங்களின் மீதான மாநில உரிமையை மீட்டெடுக்க வேண்டும்" என்று கடிதம் வாயிலாக கேட்டுக்கொண்டார். அதன்படியே இன்று கேரள அரசும் யுஜிசி வரைவறிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. அனைத்து மாநிலங்களும் மாநில உரிமைகளை காக்க ஓரணியில் திரண்டு நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

விஷ செடியையும், விஷம செயலையும் முளையிலேயே கிள்ளி எறிதல் அவசியம். அப்படியே மோடி அரசிற்கு உட்பட்ட ஹிநிசி-யின் இந்த சர்வாதிகார செயலையும் நாம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

மாநில அரசுகளின் அதிகாரத்தை நீக்கி கூட்டாட்சிக்குக் குழி பறிக்கும் ஹிநிசி வெளியிட்ட வரைவு அறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இதனைத் திரும்பப் பெறும் வரை திராவிட மாடல் அரசும், தமிழ்நாட்டு மக்களும் தங்களது எதிர்ப்பில் இருந்து ஒரு நொடியும் பின் வாங்க மாட்டார்கள். மாநில உரிமைகளைப் பறிக்க நினைக்கும் மோடி அரசிற்கு எதிராக ஒன்றுபடுவோம். மீட்டெடுப்போம் நமது கல்வி உரிமையை... நிலைநாட்டுவோம் மாநில சுயாட்சியை!

# சென்னை ஒருங்கிணைந்த குற்றப்பிரிவின் தொடர் கண்காணிப்பால், கடந்த 4 மாதங்களில் 41 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் உட்பட 53 குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது

சென்னை, 22 ஜனவரி 2025: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில், சென்னையில் பொது அமைதியை நிலைநாட்டிடவும், கொலை போன்ற கொடுங்குற்றங்கள், முன்விரோத, பழி வாங்கும் கொலை குற்றங்கள், சட்டம், ஒழுங்குக்கு குந்தகம் விளைவிக்கும் சரித்திர பதிவேடு குற்ற பின்னணி நபர்களை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்து, சட்டத்தின்படி தண்டனை உறுதி செய்யவும், ஒருங்கிணைந்த குற்றப் பிரிவு (ஓசியு) செயல்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், நுண்ணறிவுப் பிரிவு இணை ஆணையாளர் திரு.தர்மராஜன், இ.கா.ப., அவர்கள் வழிகாட்டுதலின்பேரில், நுண்ணறிவுப்பிரிவு துணை ஆணையாளர் திரு.எஸ்.சக்தி கணேசன், இ.கா.ப. அவர்கள் மேற்பார்வையில், உதவி ஆணையாளர் தலைமையில், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள் அடங்கிய ஒருங்கிணைந்த குற்றப் பிரிவு (ஓசியு) காவல் குழுவினர் மற்றும் காவல் நிலைய ஆய்வாளர்கள், ஆளிநர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் காரணமாக, சென்னை பெருநகர காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தின் மூலமாக தண்டனை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சரித்திர பதிவேடு குற்றவாளிகள் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை தீவிரமாக கண்காணித்து, உரிய விசாரணை நடத்தப்பட்டு, வழக்குகளில் குற்றப்பத்திரிகைகளை நீதிமன்றங்களில் விரைவாக தாக்கல் செய்யப்பட்டது. குற்றவாளிகள் தொடர் குற்றங்களில் ஈடுபடும்போதும், காவல்துறையின் நடவடிக்கையால் அவர்களின் பிணை ரத்து செய்யப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படாமல் குற்றவாளிகளுக்கு சட்டப்படி நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத் தரப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களின் அறிவுரைப்படி புதிதாக துவங்கப்பட்ட ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு காவல் குழுவினர் கடந்த 2024ம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான 4 மாதங்களில் சென்னை யெருநகர காவல், 12 காவல் மாவட்ட காவல் நிலையங்களில் பராமரித்து வருகின்ற 41 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலமாக சிறை தண்டனை உறுதி செய்யப்பட்டது.

காவல் நிலைய காவல் ஆய்வாளர்கள் மூலம் முறையாக நீதிமன்ற விசாரணை வழக்குகளில், சான்றாவணங்கள் நீதிமன்றங்களில் சமர்ப்பித்தும், குற்றவாளிகளை முறையாக ஆஜர்படுத்தியும், வழக்குகளில் தொடர்புடைய சாட்சிகளை நீதிமன்றங்களில் ஆஜர் செய்து, நீதிமன்ற வழக்கு விசாரணை முடியும் வரை வழக்கு நடவடிக்கைகளை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இதனால், ஏ கேட்டகிரி சரித்திர பதிவேடு 3 குற்றவாளிகள், பி வகை சரித்திர பதிவேடு 8 குற்றவாளிகள், சி வகை சரித்திர பதிவேடு 29 குற்றவாளிகள் மற்றும் கேடி வகை 1 குற்றவாளி என 41 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் உட்பட அவர்களுடன் குற்றச் செயலில் ஈடுபட்ட மேலும் 12 குற்றவாளிகள் என மொத்தம் 53 குற்றவாளிகளுக்கு நீதிமன்ற விசாரணைக்கு பின்னர் மாண்புமிகு நீதிமன்றங்கள் மூலம் உரிய தண்டனை பெற்று தரப்பட்டு, 53 குற்றவாளிகளும் தண்டனை சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதில் 2010ம் ஆண்டு இ-4 அபிராமபுரம் காவல் நிலைய கொலை வழக்கில் 4 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுடன் 6 குற்றவாளிகள் மற்றும் 2012ம் ஆண்டு ஆர்-3 அசோக்நகர் காவல் நிலைய கொலை வழக்கில் 2 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என 8 குற்றவளிகள் உள்ளடங்குவர். மேலும், 4 கஞ்சா வழக்குகளில் தொடர்புடைய 7 சரித்திர பதிவேடு குற்றவாளிகள், பணம் கேட்டு மிரட்டிய 5 வழக்குகளில் தொடர்புடைய 5 குற்றவாளிகள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் தாக்கிய 6 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 6 குற்றவாளிகள், உள்ளிட்ட 53 குற்றவாளிகளுக்கு உரிய நீதிமன்ற யூண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட நடவடிக்கையினால், குற்ற நிகழ்வுகள் குறைந்த நிலையில்,

தொடர்ச்சியாக ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு கண்காணிப்பில் இருந்து வருகின்ற சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் நீதிமன்ற விசாரணை வழக்குகளில் உரிய தொடர்ச்சியான நடவடிக்கையின் மூலம் நீதிமன்ற தண்டனை பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# புது வண்ணாரப்பேட்டை பகுதியில் வீட்டில் தூங்கி கொண்டிருந்த பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் கைது.

சென்னை, 22 ஜனவரி 2025: சென்னை, புது வண்ணாரப்பேட்டை பகுதியில் குடும்பத்துடன் வசித்து வரும் 35 வயது பெண்மணி ஒருவர் 19.01.2025 அன்று இரவு அவரது வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது, ஒரு நபர் மேற்படி பெண்ணின் அருகில் சென்று அவரை தொட்டு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். உடனே திடுக்கிட்டு எழுந்த அப்பெண் சத்தம் போடவே, சத்தம்



கேட்டு எழுந்த பெண்ணின் கணவர் அந்த நபரை பிடிக்க முற்பட்டபோது, அந்த நபர் ஓடிச் சென்று மேற்படி வீட்டின் கதவை வெளிப்புறமாக தாழிட்டு தப்பிச் சென்றார். இது குறித்து மேற்படி பெண் எச்-5 புது வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து

போலீசார் விசாரணை மேற்கொண்டனர். எச்-5 புது வண்ணாரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட சையது அப்துல் சதார் (எ) நசீர், வ/32, த/பெ.பாபு, முருகன் கோயில் தெரு, அத்திப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி சையது அப்துல் சதார் (எ) நசீர்

விசாரணைக்குப் பின்னர் 20.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற ளுத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# யானைகவுனி பகுதியில் உள்ள தங்கநகை கடையில் தங்க நெக்லஸ்களை திருடிய பெண் கைது. சுமார் 83.55 கிராம் எடையுள்ள 3 தங்க நெக்லஸ்கள் பறிமுதல்.

சென்னை, 22 ஜனவரி 2025: சென்னை, யானைகவுனி, என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் நரேஷ்குமார் மேத்தா, வ/54, த/பெ.உத்தம் சந்த் என்பவர் ஸ்ரீமஹாவீர் ஜீவல்லரி என்ற தங்கநகை கடை நடத்தி வருகிறார். இவர் 17.01.2025 அன்று இரவு கடை மூடுவதற்கு முன்பு தங்க நகைகளை சரிபார்த்த போது, சுமார் 240 கிராம் எடையுள்ள தங்க நெக்லஸ்கள் திருடு போயுள்ளது தெரியவந்தது. இது குறித்து நரேஷ்குமார் மேத்தா சி-2 யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

சி-2 யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்திில்பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும் மேற்படி

தங்க நெக்லஸ்களை திருடிய முத்துலட்சுமி, வ/40, க/பெ.பாஸ்கரன், நேதாஜி நகர், தண்டையார்பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட முத்துலட்சுமி மேற்படி தங்க நகைக்கடையின் வாடிக்கையாளர் என்பதும், இவர் கடந்த 24.12.2024 அன்று மேற்படி தங்கநகை கடைக்கு சென்று, தங்க நெக்லஸ்களை பார்த்துவிட்டு தங்க நெக்லஸ் செய்ய ஆர்டர் கொடுத்துவிட்டு, கடையிலிருந்த தங்க நெக்லஸை திருடிச் சென்றதும், பின்னர் 17.01.2025 அன்று ஆர்டர் கொடுத்த தங்க நெக்லஸை வாங்குவதற்கு தனது குழந்தையுடன் கடைக்கு சென்று, தங்க நெக்லஸை பார்த்து அதில் சில குறைபாடுகள் உள்ளதாக கூறி சரி செய்ய சொல்லி செல்லும்போது,

மேலும் சில தங்க நெக்லஸ்களை திருடிச் சென்றதும் தெரியவந்தது. அவரிடமிருந்து சுமார் 83.55 கிராம் எடையுள்ள 3 தங்க நெக்லஸ்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட முத்துலட்சுமி விசாரணைக்குப் பின்னர் 20.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# சத்தீஸ்கரில் பாதுகாப்பு படையினர் வேட்டையில் 14 நக்சலைட்கள் சுட்டுக்கொலை

சென்னை, 22 ஜனவரி 2025: சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுன்டரில் 14 நக்சலைட் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்கள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. அவர்களை கட்டுப்படுத்த மாநில போலீசாருடன் இணைந்து மத்திய பாதுகாப்பு படையினரும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஹரியபெண்ட் மாவட்டத்தில் ஒடிசா எல்லையையொட்டிய வனப்பகுதியில் நக்சலைட்கள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் நேற்று இரவு முதல் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். அப்போது, அங்கு பதுங்கி இருந்த நக்சலைட்கள் திடீர் துப்பாக்கி சூடு நடத்தினர். இதற்கு பாதுகாப்பு படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். இன்று அதிகாலை வரை துப்பாக்கி சண்டை நீடித்தது.

இந்த என்கவுண்டரில் மத்திய நக்சலைட் குழு உறுப்பினரான ஜெயராம் உள்பட 14க்கும் மேற்பட்ட நக்சலைட்கள் கொல்லப்பட்டதாக காரியாபந்த் காவல் கண்காணிப்பாளர் நிகில் ரேஹச்சா தெரிவித்துள்ளார். மேலும், கொல்லப்பட்ட நக்சலைட்கள் வைத்திருந்த ஏராளமான துப்பாக்கிகள், வெடிமருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரூ.1 கோடி சன்மானம்

கொல்லப்பட்ட நக்சலைட்களில் தலைக்கு 1 கோடி ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்ட நக்சலைட்டும் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில், கோப்ரா பிரிவைச் சேர்ந்த பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

மாவட்ட ரிசர்வ் படை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை, சத்தீஸ்கரின் கோப்ரா மற்றும் ஒடிசாவின் சிறப்பு நடவடிக்கை குழு ஆகியோர் அடங்கிய கூட்டுக்குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேலும் அப்பகுதியில் நக்சலைட்கள் பதுங்கி இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ள நிலையில், அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து சத்தீஸ்கர் துணை முதல்வர் அருண் சாவ் கூறியதாவது:

“அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் நக்சலைட்கள் இல்லாத நாடாக மாற்றுவோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரும் துணிச்சலுடன் செயல்பட்டு வருகின்றனர். காரியாபந்தில் நக்சலைட்களை கொன்ற வீரர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

# ஆம்பெனோல் நிறுவனம், பாரத் மொபிலிட்டி குளோபல் எக்ஸ்போ 2025 இல் இரண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை அறிமுகப்படுத்தி கண்டுபிடிப்பில் புரட்சி ஏற்படுத்துகிறது




சென்னை, 22 ஜனவரி 2025: தகவல் தொடர்புகள், மொபைல் நுகர்வோர் தயாரிப்புகள், ஆர்எஃப், ஆப்டிகல், பிராட்பேண்ட் மற்றும் கமர்ஷியல் எலக்ட்ரானிக்ஸ் சந்தைகளுக்கான இடை இணைப்பு தீர்வுகளில் உலகின் ஒரு முன்னணி நிறுவனமான ஆம்பெனோல், பாரத் மொபிலிட்டி குளோபல் எக்ஸ்போ 2025 இன் ஆதரவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட புது தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற பாரத் பேட்டரி ஷோ 2025 இல் நாட்டின் முதன்மையான பேட்டரி தொழில்நுட்ப கண்காட்சியில் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட துரஸ்வாப் கான்சென்ட்ரிக் கனெக்டர்கள் மற்றும் டைப் 6 சார்ஜிங் கன் தீர்வு அறிமுகத்துடன் நிலையான தொழில்நுட்ப தீர்வுகளின் அடுத்த சகாப்தத்தை இன்று அறிமுகப்படுத்தியுள்ளது .தலைமைக் குழு மற்றும் பிற முக்கியஸ்தர்களுடன் டாக்டர் திருமதி அனிதா குப்தா, சைன்டிஃபிக் டிவிஷன்ஸ் தலைவர் (எச்ஓடி), டிஎஸ்தி; திரு. சுரேஷ் பாபு, சயின்டிஸ்ட் /இயக்குனர், டிஎஸ்தி; மற்றும் ஆம்பெனோல் நிறுவனத்தின் இ-மொபிலிட்டி உலகளாவிய தயாரிப்பு சந்தைப்படுத்தல் மேலாளர், திரு. டோனி பீட்டர் பால் ஆகியோர் கலந்துகொண்டதன் மூலம் இந்த வெளியீட்டு விழா சிறப்பிக்கப்பட்டது. இரு மற்றும் மூன்று சக்கர வாகனப் பயன்பாடுகளில் ஒரு வலுவான கவனம் செலுத்துதல் மூலம், இந்தியாவின் இ-மொபிலிட்டி சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்கான ஆம்பெனோல் நிறுவனத்தின் உறுதிப்பாட்டுடன் இந்த அறிமுகப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்புகள் ஒத்துப்போகின்றன.

கண்டுபிடிப்பு மூலம் இவி வளர்ச்சியை உந்துதல் - இந்தியாவின் இவி உள்கட்டமைப்பின் எதிர்காலத்தை மறுவரையறை செய்வதற்கான ஒரு தேடலில், ஒவ்வொரு பன்முகப்படுத்தப்பட்ட இறுதி சந்தைகளிலும் ஆம்பெனோல் நிறுவனத்திற்கு அற்புதமான வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்குகின்ற புதிய கண்டுபிடிப்புகள் மூலம் எலக்ட்ரானிக்ஸில் இந்தப் புரட்சி தொடர்ந்து துரிதப்படுத்தப்படுகிறது.

இணைப்புத் தீர்வுகளில் ஒரு முன்னோடியாக, ஆம்பெனோல், நாங்கள் சேவை செய்யும் சந்தைகள் முழுவதும் வாடிக்கையாளர்களுக்கு செயல்படுத்தும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான ஒரு சந்தை மற்றும் புவியியல் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றில் தொடருகின்ற ஒரு மூலோபாயம் மற்றும் ஒரு செயலில் உள்ள மற்றும் வெற்றிகரமான கையகப்படுத்தல் திட்டத்தில் ஒரு ஆழ்ந்த அர்ப்பணிப்பு மூலம் அதன் வளர்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

ஆம்பெனோல் நிறுவனத்தின் இ-மொபிலிட்டி, குளோபல் தயாரிப்பு சந்தைப்படுத்தல் மேலாளர், திரு. டோனி பீட்டர் பால், இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவிக்கையில், “இந்தியாவில் உருவாக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட துரஸ்வாப் கான்சென்ட்ரிக் கனெக்டர்கள் மற்றும் டைப் 6 சார்ஜிங் கன் தீர்வு ஆகிய இரண்டையும் அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த தயாரிப்புகள் புதுமைக்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் உலகளவில் மின்சார வாகன உள்கட்டமைப்பின் வளர்ச்சியை ஆதரிப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பைக் குறிக்கின்றன. எங்களின் அதிநவீன பொறியியல் திறன்களைப் பயன்படுத்துதல் மற்றும் உள்ளூர் சந்தைத் தேவைகளைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றின் மூலம், இந்தியாவில் சுற்றுச்சூழல் உகந்த இயக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கான தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்."என்று கூறினார். இந்தியாவின் இவி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட இந்த தயாரிப்புகள், துராஇவி, எனர்ஜி கிளிப் தீர்வுகள், மல்டி டிரேக், பிடபிள்யுஆர் பிளேட் கனெக்டர் மற்றும் கேபிள் அசெம்பிளிகள், பார் கிளிப் தீர்வுகள், மினிடெக் பவர் கச்சிதமான கோம்போ கனெக்டர்கள் உள்ளிட்ட ஆம்பெனோல் நிறுவனத்தின் பிற அதிநவீன தீர்வுகளுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டன.

ஒரு நேரத்தில் ஒரு பிளக் மூலம் இவி சார்ஜிங்கை எளிதாக்குகின்ற டைப் 6 சார்ஜிங் கன் மற்றும் இன்லெட்:

எல்இவி சார்ஜிங் கனெக்டர்கள் மற்றும் இன்லெட் என்றும் அழைக்கப்படும் இந்த டைப் 6 சார்ஜிங் கன் மற்றும் இன்லெட், 2 பவர் மற்றும் 5 சிக்னல் உள்ளமைவுகளுடன் ஐஇசி 62196-6/ஐஎஸ்17017-2-6 தரநிலைக்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பான் 10,000 இணைக்கின்ற சுழற்சிகளுடன் 100கி வரை ஒரு தொடர்ச்சியான மின்னோட்டத்தை கொண்டு செல்ல முடியும். இந்த இணைப்பான், வாகனம் மற்றும் சார்ஜிங் உள்கட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையேயான தகவல் தொடர்பு நெறிமுறைகளுக்கு இணங்குகிறது. நுகர்வோர் தங்கள் இ-ஸ்கூட்டர்களை பொது சார்ஜிங் நிலையத்தில் சார்ஜ் செய்வதை எளிதாக்குகின்ற இந்த தரநிலையானது, பல்வேறு பிராண்டுகளின் மின்சார வாகனங்கள் மற்றும் சார்ஜிங் உள்கட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒன்றுக்கொன்று இயங்கும் தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தடையற்ற பொது மற்றும் தனியார் சார்ஜிங் தீர்வுகள் தேவைப்படுகின்ற மின்சார ஸ்கூட்டர்கள், இரு சக்கர வாகனங்கள் மற்றும் இலகுரக மின்சார வாகனங்கள் (எல்இவி கள்) ஆகியவற்றில் பயன்படுத்த இது உகந்ததாக இருக்கிறது.

வினைத்திரமிக்க பரிமாற்றம், பாதுகாப்பான மின்னேற்றம் ஆகியவற்றிற்காக துரஸ்வாப் கான்சென்ட்ரிக் கனெக்டர்கள்:

கேபிள் அசெம்பிளிகளுடன் மாற்றக்கூடிய தனிப்பயன் பேட்டரி இணைப்பு தீர்வுகள் 2 பவர் & 6 சிக்னல் உள்ளமைவுகளில் வழங்கப்படுகின்ற இந்த கனெக்டர்கள் 10,000 இனச்சேர்க்கை சுழற்சிகளுடன் 100எ வரை ஒரு தொடர்ச்சியான மின்னோட்டத்தை கொண்டு செல்ல முடியும். இணைக்கப்பட்ட நிலையில் அவை ஐபி67-மதிப்பிடப்பட்டவை மற்றும் இரண்டு திசைகளில் இணைக்கப்படமுடியும் (இரு-திசை இணைப்பு). அவை மிகவும் நீடித்துழைப்பவை மற்றும் பயன்பாட்டின் பாதுகாப்பை உறுதி செய்கின்றன மற்றும் பரந்த அளவிலான பயன்பாட்டு சூழல்களுக்கு ஏற்றது. இது மின்சார வாகனங்களில் மாற்றக்கூடிய பேட்டரி அமைப்புகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சேமிப்பு மற்றும் கரடுமுரடான அல்லது வெளிப்புற சூழல்களில் இயங்குகின்ற எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் சாதனங்களுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளது,

# 2 நாட்களில் 17 ரவுடிகள் கைது: ஆவடி கமிஷனர் அதிரடி நடவடிக்கை

சென்னை, 22 ஜனவரி 2025: ஆவடி காவல்துறை கமிஷனர் சங்கரின் அதிரடி நடவடிக்கையால் 2 நாட்களில் 17 ரவுடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஆவடி காவல்துறை ஆணையரகத்திற்கு உட்பட்ட ஆவடி மற்றும் செங்குன்றம் காவல் மாவட்டங்களில் குற்ற தடுப்பு நடவடிக்கையாக, கமிஷனர் சங்கர் உத்தரவின் பேரில் பொதுஅமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் 2 நாட்கள் தொடர் குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டு வரும் ரவுடிகள் மற்றும் சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு எதிராக போலீசாரால் ரவுடிகள் வேட்டை நடத்தப்பட்டது.

இதில், ஆவடி காவல் மாவட்டத்தில் 17 பழைய குற்றவாளிகள் மற்றும் ரவுடிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

செங்குன்றம் காவல் மாவட்டத்தில், மொத்தமாக 72 ரவுடிகள் கைது செய்யப்பட்டு, 16 ரவுடிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டும், 45 ரவுடிகள் நடத்தையின் அடிப்படையில் எச்சரித்து அனுப்பி வைத்தும், 11 ரவுடிகளிடம் நன்னடத்தை பிணையம் பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.